## தலைப்பு 202 – முஸ்லீம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 202 – முஸ்லீம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முஸ்லீம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முஸ்லீம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையில் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.1(அ) | 2021 ஆம் ஆண்டில் விற்றுத்தீர்க்கப்பட்ட தளபாட உபகரணங்கள், கணனி உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களில் 70 விடயங்களுக்குரிய கிரயத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண மீதியில் குறைத்துக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1.6.1 |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் விற்றுத் தீர்க்கப்பட்ட தளபாட உபகரணங்கள், கணனி உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என 155 விடயங்களுக்குரிய கிரயத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண மீதியிலிருந்து குறைத்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடு பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் முறையான வகையில் பொறுப்புப் பதிவேடு பேணிச்செல்லுமாறு விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் நாள்தோறும் பரீட்சித்து முடியுமான வகையில் பொறுப்புப் பதிவேட்டில் அந்தப் பொறுப்புக்கள் குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரல்படுத்தும் பதிவேடு ஒன்று பேணிச்செல்லப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனங்கள் நிரல்படுத்தப்பட்ட பதிவேடு ஒன்று பேணிச்செல்லுமாறு விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகனங்கள் நிரற்படுத்தல் பதிவேடு ஒன்று பேணிச்செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 02 மீண்டெழும் செலவின விடயம் மற்றும் ஒரு மூலதன செலவின விடயத்திற்காக வழங்கப்பட் ரூபா 45,400,000 ஆன நிதியேற்பாட்டில் ரூபா 34,353,585 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு 75 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு விநியோகித்த சுற்றறிக்கை மற்றும் அமைச்சு அவ்வப்போது விநியோகித்த சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்களைச் செய்தல் வரையறுக்கப்பட்டிருந்தது. மேலும் அகதியா தீனியாத் பரீட்சை நடாத்தும் நோக்கில் ரூபா 49 மில்லியன் தொகை 1409-36 செலவின விடயத்தில் மாற்றி உரிய பரீட்சை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதும் உரிய பரீட்சை பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் நடத்தப்பட்டமையால் திசெம்பர் பரீட்சைக்காக 2024 | இயலுமான வரை சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆம் ஆண்டில் சிட்டையிடல் சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) மீளாய்வாண்டின் போது நிதியேற்பாடு ஒதுக்கப்படாதிருந்த செலவின விடய இலக்கம் 1405 மற்றும் 1407 இற்காக மீளாய்வாண்டிற்காக 2024 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 220,948 மற்றும் 253,518 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் சுத்திகரித்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் முறையே 1405 மற்றும் 1407 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2024 இல் CIGAS பயன்படுத்தப்பட்ட பின்னர் கிடைத்த பட்டியலை உள்ளீர்க்கும் போது உரிய செலவின விடயத்தில் உள்ளீர்க்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்களுக்கான நிதியேற்பாடு ஏற்படுத்தப்படல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 2023 நவ்பர் 30 மற்றும் இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் புதிய CIGAS இணைய ஈடுபடுத்தல் மூலம் உருவாக்கப்பட்ட திரண்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கை நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (iii) ஆக இணைக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டுக்காக கிடைத்த சகல பட்டியல்களுக்காகவும் கொடுப்பனவுகள் 2023.12.31 ஆம் திகதி வரையில் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சனவரி மாதத்தில் தாமதமடைந்த பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் CIGAS மென்பொருளை ஈடுபடுத்தி உள்ளீர்க்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப ரீதியான காரணங்களினால் அது CIGAS இணைய பக்கத்தில் தரவேற்றம் செய்யப்படவில்லை. அதனால் CIGAS இணைய பக்கத்தில் தரவிறக்கம் செய்து உள்ளடக்க வேண்டிய இணைப்பு iii இல் வைக்கப்படவில்லை. எனினும் 2024 ஆம் ஆண்டில் CIGAS ஆரம்ப பொறுப்புக்கள் பட்டியலில் உரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்கு உரித்தற்ற செலவின விடய இலக்கம் 202–126–2-7-35-2401/12-P இன் கீழ் ரூபா 786,830 பெறுமதியுடைய பொறுப்பு, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு SA-92 திறைசேரி கணனி அச்சிடலில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக திறைசேரிக்கு அறிவிக்கும் போது அந்த அச்சிடல் குறிப்பை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அது திறைசேரிக்கு அறிவிக்கும் போது எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்திற் குரிய பொறுப்புக்கள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

**2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடு ஒன்றைத் தயாரித்து ஏனைய செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தமையும் அந்த மீளாய்வு எழுத்து மூலம் | எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து இது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் அறிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு இலக்குகளை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக வினைத்திறனான முறைமையொன்று ஏற்படுத்தப்பட்டமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் இந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரையிலும் வெற்றிடமாகக் காணப்படுகின்றமையால் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு முடியாதிருந்த போதும் தற்போது உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரின் உதவியுடன் முறையான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| i. நிதிப் பிரமாணம் 128(1)(உ) மற்றும் 1647 (ஆ) | - | திணைக்களத்திற்கு உரிய வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் தொர்பாக மெய்மையாய்வு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. நிதிப் பிரமாணம் 876(3) | - | திணைக்களத்தால் பேணிச் செல்லப்படுகின்ற ஹச் நிதியம் திணைக்களச் சட்டத்தின் மூலம் சட்டரீதியாக ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தை பேணிச்செல்லும் தேவையினைக் கருதி சட்டரீதியான நிலைமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஹஜ் நிதியம் சட்டரீதியான சட்டத்தின் மூலம் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் தற்போது அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை | திணைக்களத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டின் முன்னர் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படாதிருந்த துடன் சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் போக்குவரத்து சேவை குறிப்புக்கள் மாதாந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | தற்போது திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களில் கடந்த ஆண்டின் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலைமையில் காணப்படுகின்ற இரண்டு வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உரிய வாகனங்களைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் 06 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாக விநியோகிக்கப்பட்ட ரூபா 550,796 உப கட்டுநிதியை தீர்த்தல் தொடர்பான தகவல்கள் முற்பணப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அவை தீர்த்து வைக்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்துதல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய கட்டுநிதி தீர்த்து வைக்கும் தகவல்களை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதில் பிழையானதாகும். நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வகுப் நிதியத்திற்குரிய 1982 இன் 33 ஆம் இலக்க வகுப் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் முஸ்லீம் | வகுப் சட்டத்தின் பிரகாரம் முஸ்லீம் பிரஜைகள் மற்றும் இஸ்லாம் மதத்தை பின்பற்றுவதற்காக நிறைவேற்ற வேண்டிய 05 | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரஜைகள் மற்றும் இஸ்லாம் மதத்தை பின்பற்றுவதற்காக நிறைவேற்ற வேண்டிய 05 பணிகளில் ஒரு பணிக்குரிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 161,500 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் நிதியத்தில் சம்பளம் மற்றும் படிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 2,518,027 அதாவது மொத்த செலவினத்தில் 93 சதவீதமாகும். நிதியத்தின் நோக்கத்தை உரிய பிரகாரம் அமுல்படுத்தாமையின் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திடம் காணப்பட்ட நிதியின் அளவு ரூபா 79,538,421 ஆகும். | பணிகள், நிறைவேற்றுவதற்காக வகுப் சபையின் கவனம் செலுத்தி கல்விசார் போன்ற துறைகளில் ஈடுபடுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதாகவும் எதிர்காலத்தில் ஏனைய பிரிவுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு கவனம் செலுத்துவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் பதிவேடு மற்றும் வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்களை நாளதுவரையாக பேணிச்செல்லல் குழாம் வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரித்து குறித்துரைத்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல், வாகனங்களின் எரிபொருள் எரிவினை மீண்டும் பரீட்சித்தல், குறித்துரைத்த திகதியில் வங்கி இணக்கக்கூற்று தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல், வங்கி இணக்கக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் | சுட்டிக்காட்டப்பட்டுள்ள நாளதுவரையாக்கப்பட ாத புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை இனங்கண்டு நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க பேணிச் செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | இணங்குகின்ற தேவைகளை இணங்கும் வகையிலும், இணங்காத தேவைகளை இணங்காத வகையிலும் தரச்சான்றிழ் அறிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கப்பட வேண்டிய மீதிகள், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைத்தல் மற்றும் நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் பொறுப்புக்களில் கைச்சாத்திடல் ஆண்டின் இறுதியின் போது மிகுதியாகக் காணப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சாதிருக்கும் போது இணங்காத தேவைகள் இணங்குகின்ற வகையில் செயலாற்றல் அறிக்கையில் தரச்சான்றிழ் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயலாற்றல் குறிகாட்டிகளைக் கணிப்பீடுகளின் சரியான தன்மையைப் பரீட்சிப்பதற்குத் தேவையான தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் அது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் குறிகாட்டிகளை கணிப்பிடுவதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற புகையிரதத் திணைக்களத்துக்குரிய 80 பேர்ச் ஆன காணியில் 2017 ஆம் ஆண்டின் போது திணைக்களம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணியின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் திணைக்களத்தின் தலைமையில் உள்ள அமைச்சின் மூலம் இந்த காணியை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கையேற்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் 2019 நவம்பர் 28 ஆம் திகதிய இலக்கம் 07/2019 என்ற அரச நிதி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட இணைப்பின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணைப்பணம் அறவிடப்படல் வேண்டும். எனினும் பிரதி உதவிப் பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், காசாளர், களஞ்சியப் பொறுப்பாளர் மற்றும் சாரதிகள் போனற் பதவிகளுக்குரிய 09 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அரசாங்கத்தின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் புதிய உத்தியோகத்தர்கள் தவிர பிணைப் பணம் அறவிட வேண்டிய சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் தற்போது பிணைப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்தின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் புதிய உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணைப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதில் பிழையானதாகும். நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஸ்தாபிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் சகல செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற திணைக்கள கட்டிடங்களுக்கான மத்திய மயப்படுத்தப்பட்ட வளிப்பதனாக்கி முறைமை தொடர்பாக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தீர்மானங்களின் பிரகாரம் அமைச்சின் உத்தியோகத்தரையும் உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் மிகவும் ஆக்கபூர்வமான தீர்மானம் எடுக்க வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்பட்டமையால் எதிர்காலத்தில் நியமிக்கப்படுகின்ற குழுவின் பரிந்துரையின் பிரகாரம் செயற்படுவதற்கு | ஒப்பந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து உரிய நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இடம் மாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 70,504 மற்றும் 01 இற்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான காலம் நிலுவையாக இருந்த மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 202,250 மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 55,448 கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 52,800 மீதி திணைக்களத்தில் இருந்து 2004 ஆம் ஆண்டில் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்ததுடன் உரிய கடன் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மிகுதி கடன் தொகையான ரூபா 17,704 தொடர்பாக உரிய தகவல்கள் காணப்படாமையினால் கடனைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 529,708 ஆன கடன் தொகையை அறவிடுவதற்கு மே மாதத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அது CIGAS ஊடாக கணக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபண விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(2) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். எனினும் 2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் பதவி இந்த அறிக்கைத் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் உரிய பதவியின் பதிற்கடமைக்காக 2023 நவம்பர் | தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு முறையான திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும், உரிய பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தை நடாத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மாதத்தில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 10 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 41 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்தின் உள்ளக்கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை வெற்றிடமாகக் காணப்படுகின்றமையால் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் , கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்துவதற்கு முடியாதிருந்த போதிலும் தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரினது உதவியுடன் முறையான திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும், உரிய பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தை நடாத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய இலக்கம் 18/2001 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றிய சகல உத்தியோகத்தர்களும் வேறு சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்காக இடம் மாற்றம் வழங்க வேண்டிய போதிலும் திணைக்களத்தில் 05 வருடங்களை விஞ்சிய 39 உத்தியோகத்தர்களுக்காக | திணைக்களம் மிக விருப்பமான நிலையம் இல்லாதிருந்தமையினால் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் இடம் மாற்றத்திற்காக இந்தத் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்காமையினால் பதிலீட்டாளரை பெற்றுக்கொள்வதற்கு உள்ள பிரச்சினையின் அடிப்படையில் அரச நிர்வாக அமைச்சினால் இடம் மாற்றங்கள் வழங்கப்படாதிருந்த போதும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தில் உள்ள | அரச நிர்வாக அமைச்சுடன் தொடர்பினை ஏற்படுத்தி நீண்ட காலம் முதல் நிறுவனத்தில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இடம் மாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனிடையே 08 உத்தியோத்தர்கள் 18 வருடங்கள் முதல் 24 வருடங்கள் வரையிலான காலம் திணைக்களத்தில் சேவையாற்றுகின்றனர்.

உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் ஒவ்வொரு வருடமும் வருடாந்த இடமாற்றல் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.